# அலகு VIII

## தமிழும் மலையாளமும்

மொழி, வரலாறு, பண்பாடு என்ற நிலைகளில் பன்னெடுங்காலமாகத் தமிழகத்துடன் ஒத்திருந்த கேரளம், இன்று எல்லா நிலைகளிலும் தனி யான ஒரு நாடாகத் திகழ்கிறது. மலையாள இலக்கியம், இன்று வள மார்ந்த நிலையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி பெற்று வருகிறது. குமாரனாசான் கற்பனையழகும் கவிநலனும் புரட்சி உணர்வுமிக்க கவிதைகளைப் படைத்து மும்மணிகளில் மூத்த வராகத் திகழ்கிறார். தேசிய உணர்வும் இதயத்தை வருடும் இனிய உணர் வுகளும், சமுதாயவுணர்வும் உடைய கவிதைகளைப் புனைந்தவர் வள் ளத்தோள் நாராயண மேனோன். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட உள்ளூர் பரமேசுவர ஐயர் தமிழுணர்வுடன் கவிதை இசைத்தவர்; மனி தாபிமான உணர்வுகளை நன்கு மதித்தவர். மலையாளத்தின் முப்பெ ருங் கவிஞர்களான இவர்களுக்குப் பின் ஒரு கவிதைப் பரம்பரையே தோன்றியது; நவீன கவிதையுகம் மலர்ந்தது.

மலையாளச் சிறுகதை இலக்கியத்தின் தொடக்ககால எழுத் தாளர்களில் முக்கியமானவர் தகழி சிவசங்கரப் பிள்ளை. இவருடைய கதைகளில் ஒரு விரிந்த உலகத்தையே காணமுடியும். பல சிறுகதை களையும் நாவல்களையும் படைத்து மலையாளச் சிறுகதையின் தரத்தை உயர்த்திப் பிடித்த பெருமை இவருக்குண்டு.

‘கதகளி என்றால் கேரளம்: கேரளம் என்றால் கதகளி’ என்று சொல்லுமளவிற்கு, இன்று கதகளி, கேரள மக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து விட்டது. இந்தியாவில் மட்டுமன்றி, உலகநாடுகளி லும் கதகளி கேரளத்தின் முத்திரைச் சின்னமாகப் போற்றப்பட்டு வரு கிறது. முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய இக்கலை, கேரளக் கலைகளில் முதலிடம் பெறுகிறது. இதன் தோற்றம், வளர்ச்சி, ஆட்ட முறைகள் போன்றவற்றை அறிந்து கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவர் கடமையாகும். செவ்வியல் கலைகளில் ஒன்றாகிய கதகளியோடு ஏனைய கலைகளை ஒப்பிட்டுப் பார்ப்பது சுவைமிக்க ஒரு செயலாகும்.

பிற இந்திய மொழி இலக்கியம், கலை இவற்றை அறிந்து கொள் ளவும், அவற்றைத் தமிழிலக்கியக் கலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வும், மறைந்துவரும் நாட்டுப்புறக்கலைகளை அறிந்து அவற்றை வளர்க்கவும், பிறமொழிச் சிறுகதைகளை அறிந்து அவற்றின் பல்வேறு நடைகளைப் புரிந்துகொள்ளவும், அவற்றை மொழிபெயர்க்கவும் மாண வர்கள் திறன் பெற வேண்டும் என்ற நோக்கில் இவ்வலகு அமைக்கப் பட்டுள்ளது.

# 19. பிரேம சங்கீதம்

இருபதாம் நூற்றாண்டின் முப்பெரும் மலையாளக் கவிஞர்களுள் ஒருவர் உள்ளூர் பரமேசுவர ஐயர் (1877-1949). திருவனந்தபுரத்தில் உள்ளூர் என்ற இடத்தில் வாழ்ந்தவர். மலையாளமொழி மட்டுமன்றி, வடமொழியிலும் தமிழிலும் புலமை பெற்றவர். முதுகலைப் பட்டம் பெற்றவர். 'உமா கேரளம்' 'கர்ண பூஷணம்', 'அருணோதயம்', 'ரத்னமாலிகா' போன்ற பத்துக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுதிகளை வெளி யிட்டுள்ளார். மலையாள இலக்கிய வரலாற்றை மிக விரிவாக எழுதிப் பல தொகுதிகளாக வெளியிட்டிருக் கின்றார். உள்ளூரின் 'பிரேம சங்கீதம்' என்னும் இக்கவிதையைத் தமிழில் மொழி பெயர்த்தவர் 'சிற்பி பால சுப்பிரமணியம்' ஆவார்.

**விளக்குக் கைவசம் உள்ளவனுக்கு**
**உலகம் வெளிச்ச மயம்;**
**வெள்ளை மனது கொண்டவனுக்கு**
**எல்லாம் அமுத மயம்;**
**காண்பவன் இல்லை என்றால் உலகில்**
**காணப் பொருளே இல்லை;**
**ஆண்டவன் படைப்பில் ஒன்றுக்கொன்று**
**அணையா உயிரில்லை;**
**இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும்**
**ஈர்ப்பே குணமாகும்;**
**குனிபவன் உயர்வான்; நட்டவன் தின்பான்;**
**கொடுப்பவன் பெற்றிடுவான்;**
**இனிய சொர்க்கம் புனைவதும் நாமே;**
**நரகமும் அவ்வாறே!**

மலையாளம்: உள்ளூர் பரமேசுவர ஐயர்
தமிழ்: சிற்பி பாலசுப்பிரமணியம்

**விடை காண்போம்**

- எல்லாம் அமுதமயமாகக் காண்பவர் யார்?
- இயற்கைப் பொருள்களில் காணப்படும் பொதுக் குணம் யாது?
- சொர்க்கமும் நரகமும் புனைவது நாமே என்று உள்ளூர் பரமேசுவர ஐயர் கூறுவதேன்?

# 20. வெள்ளப்பெருக்கு

மலையாள இலக்கிய வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய எழுத்தாளர் தகழி சிவசங்கரப்பிள்ளை. மண்ணுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள நெருங்கிய உறவை இவருடைய படைப்புகள் உணர்த்துகின்றன. இவரது 'செம்மீன்' என்றும் நாவல் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நாவல் திரைப்படமாக வெளிவந்து சிறந்த படத்திற்கான குடியரசுத் தலைவரின் பரிசைப் பெற்றது. இவர் எழுதிய 'கயிறு' என்னும் நாவல் 1989-ஆம் ஆண்டுக்கான ஞானபீடம் பரிசு பெற்றது. 'இரண்டிடங்கழி', 'தோட்டியுடெ மகன்', 'ஏணிப்படிகள்' போன்றவை இவருடைய புகழ்பெற்ற நாவல்கள். பல சிறு கதைகளும் எழுதியுள்ளார்.

கிராமத்திலேயே சற்று உயரமான இடம் கோவில் இருக்கும் இடம்தான். அங்குக் கழுத்து வரை இருக்கும் நீருக்குள் கடவுள் நின்றிருந்தார். வெள்ளம்! கடவுளைச் சுற்றிலும் எங்குப் பார்த்தாலும் நீர் மயம்! ஊரில் இருந்த ஒவ்வொருவரும் கரையைத் தேடிப் போய் விட்டார்கள். வீட்டுக் காவலுக்கு என்று ஒரு ஆளை வைத்துவிட்டுப் போய் விட்டார்கள். வீட்டில் படகு இருக்கிறதா என்றால் இருக்கிறது. கோவிலைச் சேர்ந்த மூன்று அறைகள் கொண்ட கட்டிடத்தில் 67 குழந்தைகள் இருந்தார்கள். 356 ஆட்கள் இருந்தார்கள். நாய், பூனை, ஆடு, கோழி போன்ற வளர்ப்புப் பிராணிகளும்தான். எல்லாம் ஒற்றுமையாக இருந்தன. ஒரு சிறு சண்டை கூட இல்லை.

சேன்னன் ஒரு இரவிலும் ஒரு பகலிலும் நீரிலேயே நின்றிருந்தான். அவனிடம் படகில்லை. அவனின் முதலாளி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு முன் கூட்டியே கரையைத் தேடிப் போய் விட்டார். முதலில் வீட்டிற்குள் தண்ணீர் புகத் தொடங்கும் போதே தென்னங்கீற்றையும் கம்பையும் வைத்து அவன் பரண் உண்டாக்கினான். நீர் எப்படியும் இறங்கிவிடும் என்று நினைத்து இரண்டு நாட்கள் அதிலேயே உட்கார்ந்து நேரத்தைப் போக்கினான். போதாக் குறைக்கு, நான்கைந்து வாழைக்குலைகள் வேறு அங்கு இருந்தன. அங்கிருந்து அவன் போய் விட்டால் அவற்றை நிச்சயம் ஆட்கள் திருடிக் கொண்டு போய் விடுவார்கள்.

இப்போது பரணுக்கும் மேலே முழங்கால் வரை நீர் நிறைந்திருந்தது. உள்ளே இருந்தவாறு சேன்னன் அழைத்தான். அவன் அழைப்பதை யார் கேட்பது? கேட்பதற்குத்தான் பக்கத்தில் யார் இருக்கிறார்கள்? கர்ப்பமாக இருக்கும் மனைவி. நான்கு குழந்தைகள், ஒரு பூனை, ஒரு நாய் இத்தனை உயிர்களும் அவனை நம்பித்தான் இருந்தன. வீட்டுக்கு மேலே நீர் வர இன்னும் சிறிது நேரமே ஆகும் என்பதையும் தன் குடும்பத்தின் இறுதி நிமிடம் நெருங்கி விட்டது என்பதையும் அவனால் உணர முடிந்தது. பலமாக மழை பெய்ய ஆரம்பித்து இன்றோடு மூன்று நாட்கள் ஆகி விட்டன. கூரையின் ஓலையைப் பிரித்துக் கீழே இறங்கிய சேன்னன் சுற்றிலும் பார்த்தான். வடக்குத் திசையில் ஒரு படகு போய்க்கொண்டிருந்தது. உரத்த குரலில் சேன்னன் அழைத்தான். அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். அவன் அழைத்தது படகில் இருந்தவர்களுக்குக் கேட்டது. அவர்கள் படகைக் குடிசை இருக்கும் பக்கம் திருப்பினார்கள். குழந்தைகளையும் மனைவியையும் நாயையும் பூனையையும் வீட்டினுள்ளிருந்து ஒவ்வொருத்தராகச் சேன்னன் வெளியே இழுத்தான். அவர்கள் வெளியே வரவும் படகு வந்து சேரவும் சரியாக இருந்தது.

குழந்தைகள் படகில் ஏறி கொண்டிருந்தார்கள். சேன்னச்சா இங்கே பாருங்க - மேற்குப் பக்கத்திலிருந்து யாரோ அழைத்தார்கள். சேன்னன் திரும்பிப் பார்த்தான். இங்க வாங்களேன் - அழைத்தது மடியத்தரை குஞ்ஞேப்பன். அவன் தன்னுடை வீட்டின் முன்னால் நின்று உரத்த குரலில் அழைத்தான். மிகவும் வேகமாகத் தன்னுடைய மனைவியைப் படகில் ஏற்றினான் சேன்னன். நாயை எல்லோருமே மறந்து

விட்டார்கள். அது வீட்டின் மேற்குப் பக்கம் இங்கும் அங்குமாய் முகர்ந்து பார்த்தவாறு நடந்து கொண்டிருந்தது.

படகு நகர்ந்து போய்க்கொண்டேயிருந்தது.

நாய் குடிசையின் மேல் பகுதிக்கு வந்தது. சேன்னன் இருந்த படகு தூரத்தில் போய்க்கொண்டிருந்தது. அது படு வேகமாக நீங்கிக்கொண்டிருந்தது. மரண வேதனையுடன் அந்த அப்பிராணி நாய் ஊளையிட ஆரம்பித்தது. ஆதரவில்லாமல் அனாதையாக நின்று கொண்டிருக்கும் ஒரு மனிதனின் குரலையொட்டி ஒற்றுமை இருக்க கூடிய ஒருவிதச் சத்தத்தை அந்த நாய் உண்டாக்கியது. அதைக் கேட்பதற்கு அங்கு யார் இருக்கிறார்கள்? வீட்டின் நான்கு பக்கங்களிலும் அது ஓடியது. ஆங்காங்கே முகர்ந்து பார்த்தது.

குடிசையின் மேல் பாதுகாப்பாக அமர்ந்திருந்த ஒரு தவளை சிறிதும் எதிர்பார்க்காமல் ஒலித்த இந்தச் சத்தத்தைக் கேட்டுப் பயந்து போய் நாயின் முன்னால் நீரில் நகர்ந்தது. அதைப் பார்த்த நாய் பயந்து போய் நடுங்கியவாறு பின்னோக்கி குதித்து, நீரில் உண்டான சலனத்தையே பார்த்தவாறு சிறிது நேரம் நின்றிருந்தது.

உணவிற்காக அந்த நாய் அங்குமிங்குமாய் ஓடி பரிதவித்தது. ஒரு தவளை நாயின் மூக்கில் சிறுநீர் கழித்துவிட்டு, நீருக்குள் குதித்தது. தர்மசங்கடமான நிலைக்கு ஆளான நாய் ஒரு வித சத்தத்தை உண்டாக்கியவாறு தும்மியது. தலையை ஆட்டியவாறு குரைத்தது. முன்னங்கால்களில் ஒன்றால் மூக்கை துடைத்தது.

பயங்கரமான பேய் மழை மீண்டும் பெய்யத் தொடங்கியது. ஒரு மூலையில் தன் உடலைச் சுருக்கிக்கொண்டு அமர்ந்திருந்தது அந்த நாய். அதன் எஜமானன் அம்பலப்புழையைச் சேர்ந்து விட்டிருந்தான்.

இரவு நேரம் வந்தது. பெரிய பாம்பொன்று நீருக்குள் பாதி மூழ்கிய நிலையில் இருக்கும் அந்தக் குடிசையையொட்டி மெதுவாக ஊர்ந்து வந்துகொண்டிருந்தது. பயந்து போன நாய் வாலைத் தாழ்த்திக் கொண்டு குரைத்தது. அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத பாம்பு ஊர்ந்து போய் மறைந்தது.

கூரையின்மேல் போய் அமர்ந்து கொண்ட அந்த ஆதரவற்ற நாய் சுற்றிலும் சூழ்ந்திருந்த இருட்டைப் பார்த்து ஊளையிட்டு அழுதது. அந்த நாயின் வேதனை நிறைந்த அழுகைச் சத்தம் தூரத்தில் இருந்த இடங்கள் வரை கேட்டது. அந்த நாயின் நிலையைப் பார்த்துப் பரிதாபப்பட்ட வாயு பகவான் அந்த ஊளைச் சத்தத்தை எல்லாப் பகுதிகளிலும் கேட்கும் வண்ணம் எடுத்துச் சென்றான். வீடுகளைக் காவல் காக்கும் காவலாளிகளில் இரக்க குணம் கொண்ட சிலர் ‘அய்யோ..... வீட்டு மேல இருந்து நாய் ஊளையிடுகிறது’ என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். கடற்பகுதியை அடைந்திருக்கும் நாயின் எஜமானன் இப்போது இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருப்பான். வழக்கம்போலச் சாப்பிடும்போது இன்றும் ஒரு உருண்டைச் சோற்றை அவன் அந்த நாய்க்காக உருட்டிக் கொண்டிருப்பான்.

உரத்த குரலில் சிறிதுகூட இடைவெளியின்றிச் சிறிது நேரம் அந்த நாய் ஊளையிட்டு அழுது கொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாகச் சத்தம் குறைந்து, பின்னர் இல்லாமலே ஆனது. வடக்கில் எங்கோ ஒரு வீட்டில் அமர்ந்து அந்த வீட்டின் காவல்காரன் இராமாயணம் படித்துக் கொண்டிருந்தான். அதைக் கேட்பது மாதிரி எந்தவித சத்தமும் எழுப்பாமல் நாய் வடக்கு நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தது. பிறகு சிறிது நேரம் கழித்துத் தொண்டையே கிழிந்து விடுகிற மாதிரி நாய் மீண்டும் ஊளையிடத் தொடங்கியது.

அந்த அமைதியான இரவு நேரத்தைக் கிழித்துக் கொண்டு இராமாயணம் படிப்பது மீண்டும் காற்றில் தவழ்ந்து வந்து எல்லாப் பக்கங்களிலும் கேட்டது. நம்முடைய அப்பிராணி நாய் காற்றில் மிதந்து வந்த அந்த மனிதக் குரலைக் கேட்டுப் பல நிமிடங்கள் காதுகளைக் கூர்மையாக வைத்துக் கொண்டு சிறிது கூட அசையாமல் நின்றிருந்தது. இராமாயணத்தின் வரிகள் பாடலாகக் காற்றோடு கரைந்து எல்லாத் திசைகளிலும் கேட்டது. காற்றின் ஓசையும் நீரின் அலைகள் எழுப்பும் சத்தமும் தவிர வேறு எந்தச் சத்தமும் கேட்கவில்லை.

வீட்டின் மேற்கூரைமேல் ஏறி நாய் படுத்திருந்தது. புஸ் புஸ் என்று சத்தமாகக் கேட்கிற மாதிரி அது மூச்சு விட்டுக் கொண்டிருந்தது. அவ்வப்போது

விரக்தி தோன்ற அது முணுமுணுக்கவும் செய்தது. அப்போது ஒரு மீன் நீரில் துடித்தது. வேகமாக எழுந்த நாய் அதைப் பார்த்துக் குரைத்தது. மற்றொரு இடத்தில் தவளை குதித்தது. ஒரு மாதிரி ஆகிவிட்ட நாய் மெதுவான குரலில் முனகியது.

பொழுது புலர்ந்தது. மெதுவான குரலில் அது அழுதது. தொடர்ந்து இதயத்தையே பிழிகிற மாதிரியான ஒரு குரலில் அந்த நாய் ஊளையிட்டது. தவளைகள் நாயையே உற்றுப் பார்த்தன. நீருக்குள் குதித்து அதன் மேற்பரப்பில் நீந்திக் கொண்டிருக்கும் தவளைகளையே பார்த்தவாறு நாய் நின்றிருந்தது.

நீர்ப்பரப்பிற்கு மேலே தெரிந்துகொண்டிருக்கும் ஓலையால் ஆன கூரைகளை அது ஆவலுடன் பார்த்தது. எல்லாமே வெறுமையாய்க் கிடந்தன. ஒரு இடத்திலும் நெருப்பு புகைவது மாதிரி தெரியவில்லை. தன்னுடைய உடலைக் கடித்துச் சுகம் காணும் ஈக்களை நாய் கடித்துத் தின்றது. தன்னுடைய பின்னங்கால்களால் தாடைப் பகுதி சொறிந்து ஈக்களை விரட்டியது.

சிறிது நேரத்தில் சூரியன் தெரிய ஆரம்பித்தது. அந்த இளம் வெயிலில் நாய் படுத்து உறங்க ஆரம்பித்தது. குடிசையின் ஒரு பக்கம் வாழை இலை ஒன்று உரச அந்தச் சத்தத்தைக் கேட்டு எழுந்த நாய் உரத்த குரலில் குரைத்தது.

கருமேகங்கள் சூழ, சூரியன் மறைந்தது. சுற்றிலும் இருள் வந்து படர்ந்தது. காற்றலைகளை உண்டாக்கியது. நீரின் மேற்பரப்பில் இறந்து போன உயிரினங்கள் மிதந்து வந்தன. நீரில் ஆடி அசைந்து வரும் அவை எல்லாப் பக்கங்களிலும் அலைபாய்ந்து கொண்டிருந்தன. அவற்றை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்த நம்முடைய நாய் முனகியது.

சற்றுத் தூரத்தில் ஒரு சிறு படகு. படுவேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. நாய் எழுந்து நின்று தன்னுடைய வாலை ஆட்டியது. அந்தப் படகையே வைத்த கண் எடுக்காது பார்த்தது. சிறிது நேரத்தில் அந்தப் படகு தென்னந்தோப்புக்குள் நுழைந்து மறைந்தது.

மழை பெய்யத் தொடங்கியது. பின்னங்கால்களை மடக்கி வைத்துக்கொண்டு முன்னங்கால்களைத் தரையில் ஊன்றி உட்கார்ந்தவாறு அந்த நாய் நான்கு பக்கமும் பார்த்தது. அதன் கண்களில் பார்ப்போர் யாரையும் அழ வைக்கும் வண்ணம் ஒரு ஆதரவற்ற நிலை தெரிந்தது.

மழை நின்றது. வடக்குப்பக்கம் இருந்த வீட்டிலிருந்து வந்த ஒரு சிறு படகு மெதுவாக நகர்ந்து ஒரு தென்னை மரத்திற்குக் கீழே வந்துகொண்டிருந்தது. நம்முடைய நாய் வாலை ஆட்டிய வாறு கொட்டாவி விட்டவாறு முனகியது. படகுக்காரன் தென்னை மரத்தின் மேல் ஏறிக் கள்ளை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினான். அவன் படகில் அமர்ந்து கள்ளைக் குடித்துவிட்டுத் துடுப்பைப் போட்டவாறு அந்த இடத்தை விட்டு நீங்கினான்.

சற்றுத் தூரத்திலிருந்த மரக்கிளையில் இருந்து காகம் ஒன்று பறந்து வந்து, நீரில் மிதந்து வந்து கொண்டிருந்த செத்துப் போன எருமை மாட்டின் அழுகிப் போன உடல்மீது வந்து உட்கார்ந்தது. அதைப் பார்த்துச் சேன்னனின் நாய் பயங்கரமாகக் குரைத்தது. அதைப் பற்றியெல்லாம் சிறிதும் கவலைப் படாத காகம் எருமையின் உடலைத் தன்னுடைய அலகால் கொத்தி மாமிசத்தைத் தின்று, பறந்து போனது.

ஒரு பச்சைக் கிளி குடிசைக்குப் பக்கத்திலேயே நின்றிருந்த வாழை மரத்தில் வந்து உட்கார்ந்து கத்தியது. அதைப் பார்த்துக் கடுப்பான நாய் குரைக்க, கிளி அடுத்த நிமிடம் அங்கிருந்து பறந்து போனது.

வெள்ளத்தில் மிதந்து வந்த ஒரு எறும்புக்கூடு அந்தக் குடிசையில் பட்டு ஒதுங்கி எப்படியோ தப்பித்துக் கொண்டது. ஏதோ உணவுப் பொருள்தான் மிதந்து வருகிறது என்று நினைத்த நம்முடைய நாய் அதற்கு ஒரு முத்தம் கொடுத்தது. அடுத்த நிமிடம் அது தும்ம ஆரம்பித்துவிட்டது. அதன் மென்மையான மூக்கு சிவந்து தடித்தது.

பிற்பகல் நேரமானபோது ஒரு சிறு படகில் இரண்டு ஆட்கள் அந்த வழியே வந்தார்கள். அவர்களைப் பார்த்து நாய் நன்றியுடன் குரைத்துத் தன்னுடைய வாலை ஆட்டியது. மனிதர்களின் மொழியுடன் மிகவும் நெருக்கமான மொழியில் அது

என்னவோ சொல்வதைப் போல் இருந்தது. அடுத்த நிமிடம் நீருக்குள் இறங்கி படகிற்குள் குதிக்க அது தயாராக நின்றது. 'அதோ ஒரு நாய் நிக்குது' படகில் இருந்த ஒருவன் சொன்னான். அவன் சொன்னதைப் புரிந்து கொண்டதைப் போல நன்றியை வெளிப்படுத்தும் விதத்தில் நாய் இலேசாக முனகியது. 'அது அங்கேயே இருக்கட்டும்.' இன்னொரு ஆள் சொன்னான். என்னவோ சொல்ல வருவதைப் போல் நாய் தன்னுடைய வாயைத் திறந்து மூடியது. ஒரு மாதிரி முனகியது. பிரார்த்தித்தது. இரண்டு முறை அது படகில் குதிக்க முயற்சி செய்தது.

படகு நாயைத் தாண்டி போய்க் கொண்டிருந்தது. நாய் மீண்டும் ஊளையிட்டு அழுதது. படகில் இருந்த ஒருவன் திரும்பிப் பார்த்தான்.

'அய்யோ!'

அது படகில் இருந்த மனிதன் சொன்னதல்ல. நம்முடைய நாயின் குரல்தான்.

'அய்யோ!'

இதயத்தை நெகிழ வைக்கும் அந்த வேதனைக் குரல் காற்றில் மிதந்து எதிரொலித்தது. மீண்டும் நிற்காத அலைகளின் சத்தம். யாரும் அதற்குப் பிறகு திரும்பிப் பார்க்கவில்லை. அதே இடத்தில் படகு மறையும் வரை பார்த்தவாறு நாய் நின்றிருந்தது. உலகத்திடமிருந்து இறுதியாக விடைபெற்றுக் கொள்வது மாதிரி மெதுவான குரலில் முணுமுணுத்தவாறு அது மீண்டும் குடிசையின் மேல் ஏறியது. இனியொரு முறை மனிதர்கள் மேல் அன்பு செலுத்துவதில்லை என்று அது தனக்குள் தீர்மானித்திருக்கலாம்.

குளிர்ந்த நீரை அது நக்கி குடித்தது. மேலே வானத்தில் பறந்து போய்க்கொண்டிருந்த பறவைகளை அந்த அப்பிராணி நாய் பார்த்தது. அலைகளோடு சேர்ந்து ஒரு தண்ணீர் பாம்பு வேகமாக வந்துகொண்டிருந்தது. அவ்வளவுதான் பயந்து போன நாய் மீண்டும் குடிசையின் மேல்பகுதி நோக்கி ஓட ஆரம்பித்தது. சேன்னனும் குடும்பமும் வெளியேறிய பிரிக்கப்பட்ட பகுதி வழியாக அந்தத் தண்ணீர் பாம்பு உள்ளே நுழைந்தது. நாய் அந்த ஓட்டை வழியாக உள்ளே எட்டிப் பார்த்தது. கோபத்திற்கு ஆளான அந்த நாய் குரைக்கத் தொடங்கியது. தொடர்ந்து அது மெதுவான குரலில் முனகியது. வாழ்க்கையைப் பற்றிய அச்சமும் பசியும் அதன் முனகல் சத்தத்தில் கலந்திருந்தன. எந்த மொழி பேசக்கூடிய மனிதனுக்கும் ஏன், செவ்வாய்கிரகத்திலிருந்து வருபவனுக்குக் கூட நன்றாகப் புரியக்கூடிய மொழி அது. யாருக்குத்தான் நாயின் அந்த மொழியைப் புரியாது?

இரவு வந்தது. பயங்கரமான காற்றும் மழையும் ஆரம்பித்தன. குடிசையின் மேற்கூரை அலைகள் மோதி இப்படியும் அப்படியுமாய் ஆடியது. இரண்டு முறை நாய் உருண்டு கீழே விழப்பார்த்தது. ஒரு நீளமான தலை நீருக்கு மேலே தெரிந்தது. அது ஒரு முதலை. நாய் மனவேதனையுடன் பயங்கரமாகக் குரைத்தது. சிறிது நேரத்தில் கோழிகள் கூட்டம் கத்தும் சத்தம் கேட்டது.

எங்கோ நாய் குரைக்குதே! இங்கேயிருந்தவங்கதான் போயிட்டாங்களே! வாழை மரத்திற்குக் கீழே வைக்கோல், தேங்காய், வாழைக்குலை ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு ஒரு படகு வந்து கொண்டிருந்தது.

நாய் படகில் இருக்கும் மனிதர்களுக்கு நேராகத் திரும்பி நின்று குரைக்க ஆரம்பித்தது. பயங்கர கோபத்துடன் வாலை உயர்த்திக் கொண்டு நீருக்கு அருகில் வந்து நின்று மீண்டும் குரைத்தது. படகில் இருந்த ஒருவன் வாழை மரத்தின் மேல் ஏறினான்.

நாய் வரும்னு நினைக்கிறேன்.

நாய் முன்னோக்கி குதித்தது. அடுத்த நிமிடம் வாழை மரத்தில் ஏறியவன் பயந்து போய் நீருக்குள் விழுந்தான். இன்னொரு ஆள் அவனைக் கையால் பிடித்துத் தூக்கினான்; படகில் ஏற்றினான். நாய் குடிசையின் கூரையின்மேல் ஏறி உடம்பைக் குடைந்தவாறு கோபத்துடன் குரைத்தது.

திருடர்கள் வாழைக்குலை அனைத்தையும் வெட்டினார்கள். 'உனக்கு வச்சிருக்கோம்பா' தொண்டையே கிழிகிற மாதிரி குரைத்துக் கொண்டிருந்த நாயைப் பார்த்து அவர்கள் கூறினார்கள். தொடர்ந்து அவர்கள் அங்கிருந்த வைக்கோல் முழுவதையும் படகில் ஏற்ற ஆரம்பித்தார்கள். கடைசியில் ஒருவன் குடிசையின் மேற்பகுதியில் ஏறினான். அவனது காலை நாய் கடித்தது. ஒரு வாய் நிறைய நாய்க்கு மாமிசம் கிடைத்தது. அவன் 'அய்யோ' என்று கத்தியவாறு குதித்து மீண்டும் படகில் ஏறினான். படகில் இருந்த இன்னொருவன் கையில் இருந்த துடுப்பால் நாயை ஓங்கி அடித்தான். ம்யாவ்! ம்யாவ்! ம்யாவ்! – நாயின் குரல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து ஒரு முனகலாக முடிந்தது. நாயால் கடிக்கப்பட்ட மனிதன்

படகில் கிடந்து அழுதான். ‘பேசாம இருடா’ இன்னொரு ஆள் சொன்னான்; படகு நகர்ந்தது.

சிறிது நேரம் கழித்து, படகு போகும் திசையைப் பார்த்துக் கோபம் மேலோங்க நாய் உரத்த குரலில் குரைத்தது.

நள்ளிரவு நேரம் ஆனது. பெரிய பசுவொன்று செத்துப் போய் நீரில் மிதந்து வந்தது. அது குடிசையின் மேல் வந்து இடித்தது. நாய் மேலே நின்றவாறு அதைப் பார்த்தது. கீழே அது இறங்கி வரவில்லை. அந்தச் செத்துப் போன பசு கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து கொண்டிருந்தது. நாய் அதைப் பார்த்து முனகியது. குடிசையின் ஓலையை வாயால் அகற்றி, வாலை ஆட்டியவாறு மெதுவாக நகர்ந்து கொண்டிருந்த பசுவின் இறந்து போன உடலைத் தன்னுடைய விருப்பப்படி அது தின்ன ஆரம்பித்தது. அதன் கடுமையான பசிக்கு விரும்பும் அளவிற்கு உணவு கிடைத்தது.

‘டே’ ஒரு அடி! நாயே காணாமல் போனது. செத்துப் போன பசு நீரில் மிதந்து வேகமாகப் போக ஆரம்பித்தது.

காற்று வீசும் சத்தமும் தவளைகளின் ஓசையும் அலைகளின் சத்தமும் தவிர வேறு எந்த ஒலியும் அந்த இரவு நேரத்தில் கேட்கவில்லை. ஒரே நிசப்தம். இதயமுள்ள வீட்டுக் காவல்காரன் அதற்குப் பிறகு நாயின் அவலக் குரலைக் கேட்கவில்லை. அழுகிப் போன பிணங்கள் அந்த நீர்ப்பரப்பில் ஆங்காங்கே மிதந்து வந்து கொண்டிருந்தன. காகங்கள் சில பிணங்களின்மேல் அமர்ந்து, அவற்றைக் கொத்தித் தின்றன. அவற்றின் செயலை எந்த ஓசையும் கெடுக்கவில்லை. திருடர்களும் தங்கள் தொழிலை எந்தவித தொந்தரவும் இல்லாமல் செய்ய முடிந்தது. அமைதி...... பயங்கர அமைதி!



சிறிது நேரம் கழித்து அந்தக் குடிசை கீழே விழுந்தது. அது நீரில் மூழ்கியது. பரந்து கிடந்த நீர்ப்பரப்பிற்கு மேலே எதுவும் தெரியவில்லை. தன்னுடைய எஜமானின் வீட்டை தான் மரணம் அடையும் வரை அந்த நன்றியுள்ள நாய் காத்து நின்றது. அதுவும் மரணத்தைத் தழுவி விட்டது. அந்த நாய்க்காக, அது முதலையிடம் சிக்கும் வரை அந்தக் குடிசை நீருக்குள் மேலேயே நின்றிருந்தது. சிறிது நேரத்தில் அந்தக் குடிசை நீருக்குள் மூழ்கிக் காணாமலே போனது.

நீர் இறங்கத் தொடங்கியது. சேன்னன் நீந்தியவாறு நாயைத் தேடி குடிசையை நோக்கி வந்து கொண்டிருந்தான். ஒரு தென்னை மரத்திற்குக் கீழே நாயின் செத்துப்போன உடல் கிடந்தது. அலைகள் அதை அவ்வப்போது வந்து தொட்டு அசைத்துக் கொண்டிருந்தன. நாயையே உற்றுப் பார்த்தான் சேன்னன். அது தன்னுடைய நாய்தானா என்று அவனுக்கே சந்தேகமாக இருந்தது. நாயின் ஒரு காது கிழிந்து போயிருந்தது. உடல் அழுகிப் போயிருந்ததால் அதன் நிறம் என்னவென்பது சரியாகத் தெரியவில்லை.

**மலையாளம்: தகழி சிவசங்கரப் பிள்ளை**

**தமிழ்:சுரா**

**விடை காண்போம்**

- சேன்னன் யார்?
- நாய் பசியால் வருந்தி ஊளையிட்ட காட்சியைத் தகழி எவ்வாறு சித்திரிக்கிறார்?
- ‘இனி ஒருமுறை மனிதர்கள் மேல் அன்பு செலுத்துவதில்லை’ என்று நாய் தனக்குள் தீர்மானித்திருக்கலாம் என்று ஆசிரியர் கூறக் காரணமென்ன?
- நன்றி கெட்ட மனிதனை விட நாய்கள்மேல் என்பதை ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார்?
- மழைவெள்ளத்தில் அகப்பட்ட உயிரினங்களின் நிலையைக் கூறுக.
- மழைவெள்ளம் ஏற்படுத்தும் சேதங்களைத் தகழி எவ்வாறு சித்திரிக்கிறார்.
- வெள்ளப் பெருக்கு கதையின் வாயிலாகத் தகழி உணர்த்தும் செய்தி யாது?

# 21. கதகளி

கேரளத்தின் நிகழ்கலைகளில் முக்கியமான ஒன்று கதகளி. ஆடலும் பாடலும் இசையும் ஒன்றாக இணைந்த இக்கண்கவர் கலை, இன்று உலக அளவில் அறியப்படுகின்றது. கேரளத்தை இனங்காட்டு கின்ற ஓர் அடையாளச் சின்னமாகவும் கதகளி விளங்குகின்றது. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் இக் கலை தோன்றியதாகக் கருதப்படுகின்றது. கதகளி முதலான கலைகளில் பயிற்சி அளிக்கவும் அவற்றை மேம்படுத்தவும் கேரள கலா மண்டலம் என்ற ஓர் அரசு நிறுவனம் திருச்சூரில் செறுதுருத்தி என்ற இடத் தில் இயங்கி வருகின்றது.

அன்று வெள்ளிக்கிழமை. கோவில் திருவிழாவில் சிறப்பு நிகழ்ச்சியாகக் **கதகளி** நடைபெற்றது. **‘பூதனா மோட்சம்’** என்ற கதையை நிகழ்த்திக் காட்டினர் ஆட்டக்காரர்! குழந்தையாக இருந்த கண்ணனைச் சூழ்ச்சி யால் கொல்ல நினைக்கிறாள் பூதனா என்ற அரக்கி. அவள் அரக்கி உருவத்தில் வரவில்லை; ஒரு பணிப் பெண் போல வருகிறாள். சூழ்ச்சியை அறிந்த கண்ணன் அவளைக் கொன்று அவளுக்கு மோட்சம் அளிக்கி றாள். இக்கதை நிகழ்ச்சியைக் கதகளி ஆட்டக்காரர்கள் அருமையாக அபிநயத்துக் காட்டினர். அதற்கு ஏற்ப தாளமேளங்களும் இனிமையாக இருந்தன. கண்டுகொண்டிருந்த மூர்த்தி தன்னை மறந்து இரசித்தான். கதகளியை இப்போதுதான் அவன் முதன்முதலாகக் காண்கிறான். இக்கலையைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்பினான்.

நிகழ்ச்சி முடிந்ததும் நேரே அரங்கின் பின்னால் சென்றான். அங்கு நின்றிருந்த கதகளி ஆட்டக் கலைஞர் குருகோவிந்த் அவர்களிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். திருச்சூர் மாவட்டம் செறுதுருத்தி எனுமிடத்தில் திகழ்கின்ற கலாமண்டலத்தில் கற்றவர் குருகோவிந்த். அவரிடம் உரையாடி மகிழ்ந்தான்.

மூர்த்தி : ஐயா, வணக்கம். உங்கள் கதகளி ஆட் டத்தைப் பார்த்தேன். மிகவும் நன்றாக இருந்தது. கதகளியின் தோற்றம், வளர்ச்சி குறித்து கொஞ்சம் சொல்லுங் களேன்!

குருகோவிந்த்: அப்படியா, சொல்கிறேனே! ராமனாட்டம், மோகினியாட்டம், கூடியாட் டம், கிருஷ்ணனாட்டம், சாக்கியார் கூத்து போன்ற பழங்காலக் கேரளக் கலைகளிருந்து தோன்றி வளர்ந்ததுதான் கதகளி. மிகவும் பழமையாக இருந்த ராமனாட்டத்தில் குறிப்பிட்டத் தகுந்த சீர்திருத்தங்கள் பல செய்து, இன்று காணும் கதகளியாய் வளர்த்தெடுத்தவர் களில் முக் கியமானவர்கள் வெட்டத்து நாட்டு ராஜா, கப்ளிங் நாட்டு நம்பூதிரி, கல்லடிக்கோட்டுச் சாமூதிரி ஆகிய மூன்று பேர்களாவர்.



ஏனைய ஆட்டங்களைப்போல் கைகளினால் முத்திரைகள் காட்டி நடிக்கும் கலையே கதகளி. ஆரம்ப காலத்தில் பாடுவதும் ஆடுவதும் ஒரே ஆள்தான். பின்னாளில் இம்முறை மாறியது.

மூர்த்தி : 'ஆட்டக்கதை' என்றால் என்னவென்று சற்று கூறுவீர்களா?

குருகோவிந்த்: கதகளியில் பாடுவதற்கு எற்ப படைக்கப்படும் கதை வடிவத்தை ஆட்டக்கதைகள் என்பார்கள். கதகளியில் நிகழ்த்தப்படும் கதைகள் யாவும் புராணக்கதைகளே. இப்புராணக்கதைகளைக் கதகளி ஆட்டத்திற்கு ஏற்றவாறு கவிதை வடிவில் அமைப்பார்கள். இவை ஆட்டக்கதைகள் என்று அழைக்கப்படுகின்றன. இத்தகைய கவிதைகளில் இலக்கிய நயம் இருக்காது என்று கூறுவார்கள். ஆயினும் இதற்கு விதிவிலக்காக நளசரிதம், கலியாண சௌகந்திகம் போன்ற கதைகள் அமைந்துள்ளன.

மூர்த்தி : நளசரிதமா? அப்படியானால் தமிழ் மொழியில் நைடதம், புகழேந்தியார் படைத்த நளவெண்பா இருக்கின்றனவே, இவையெல்லாம் ஒரே கதைகளா?

குருகோவிந்த்: ஆமாம், சிறுசிறு மாற்றங்கள் வேண்டுமானால் இருக்கலாம்.

மூர்த்தி : கதகளி நிகழ்ச்சிகள் எவ்வாறு தொடங்கும்? அதைச் சற்று விளக்குங்கள்!

குருகோவிந்த்: கதகளி நிகழ்வதற்குமுன் அது இன்ன இடத்தில் வைத்து நிகழ்த்தப்படும் என்பதை வாத்தியக் கருவிகளை முழக்கி அறிவிப்பர். இவ்வாறு அறிவிப்பதைக் 'கேளிகொட்டு' என்பர். இரவு நேரத்தில் மட்டுமே கதகளி நடத்தப்படும். வெளிச்சத்திற்காக ஒரு பெரிய குத்துவிளக்கு ஒன்று அரங்கின் முன் ஏற்றி வைக்கப்படும்.

மூர்த்தி : பிறகு.....

குருகோவிந்த்: கேளிகொட்டு முடிந்ததும் ஒப்பனைக்காக நடிகர்கள் அணியறைக்குள் நுழைந்து விடுவார்கள். சுமார் 9 மணிக்குமுன் முதல் நடிகனின் ஒப்பனை அலங்காரம் முடிந்திருக்கும். உடனேயே குத்துவிளக்கை ஏற்றி மத்தள ஒலியை எழுப்புவார்கள். இதை 'மத்தள கேளி' என்பார்கள். மத்தளகேளி முடிந்ததும் மேடையில் திரையைக் கொண்டு வந்து மறைப்பார்கள். திரையின் மறுபக்கம் பாடகர்களும் வேடம் அணிந்திருப்பவர்களில் இருவரும் வந்துவிடுவார்கள். இதைத் தமிழ்நாட்டுத் தெருக்கூத்திலும் பார்த்திருப்பீர்களே!

மூர்த்தி : ஆட்டத்தின் தொடக்கத்தில் கடவுளை வணங்கித் தானே நிகழ்ச்சியைத் தொடங்குவார்கள்?

குருகோவிந்த்: மிகவும் சரி! ஆட்டம் தொடர்ந்து எவ்வித தங்குதடையுமின்றி நல்ல முறையில் நடக்க இறைவணக்கம் நிகழ்த்தப்படும். இதனைத் 'தோடையம்' என்பார்கள். தோடையத்தின் பாட்டுக்கும் இசைக்கும் தகுந்தவாறு திரையின் மறுபக்கத்தில் நிற்கும் நடிகர்கள் நடனம் செய்வார்கள். இடையிடையே திரையை விலக்கி விட்டு நடிகன் சபையோர்களின் முன்னால் தோன்றி அங்க அசைவுகளுடன் ஆடுவான். மீண்டும் நடிகன் திரையால் மறைக்கப்படுவான். இதனைத் 'திரைநோட்டம்' என்பர்.

மூர்த்தி : கேளிகொட்டு, மத்தளகேளி, தோடையம், திரைநோட்டம் இவையாவுமே எனக்குப் புதிய தொடர்கள்; புதிய செய்திகள்.... கதகளியில் வேடங்கள் எப்படிப் போடுவார்கள்?

குருகோவிந்த்: கதகளியில் நிகழ்த்தப்படும் கதைகள் யாவும் புராணக்கதைகள். கதாபாத்திரங்களின் குணத்திற்குத் தகுந்தவாறு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான வேடங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவ்வேடங்கள் மினுக்கு, பச்சை, கத்தி, கரி, தாடி என்று ஐந்தாய்ப் பிரிக்கப்பட்டுள்ளன. முனிவர்கள், தூதுவன், பெண், பிராமணன் முதலானவர்களுக்கு மினுக்கு வேடம் போடப்படுகிறது. தர்மபுத்திரர், நளன், ஸ்ரீகிருஷ்ணன், தக்ஷன், வீமன் முதலியவர்கள் அணியும் வேடம் பச்சை எனப்படும்.

மூர்த்தி : ஆஹா! எல்லாம் எனக்குப் புதிய செய்திகள்! மேலே சொல்லுங்கள்!

குருகோவிந்த்: அரக்கர்கள் உட்பட வீரமிக்க துஷ்ட கதாபாத்திரங்களுக்குக் 'கத்தி' வேடம் போடப்படுகிறது. வாலி, சுக்ரீவன், அரிஷ்டன் முதலியவர்களுக்குத் தாடி வேடம் அணியப்படும். தாடியில் வெண்தாடி, கரும்தாடி என இரண்டு வகை உண்டு. அனுமன், சகுனி முதலியவர்கள் வெண்தாடிக்காரர்கள். கட்டாளனுக்கும் **கலிக்கும் கருந்தாடி** வைக்கப்படும். கன்னங்களில் அரைவட்ட வடிவில் சாயம் பூசுவது **கரி வேஷம்** எனப்படும். சூர்ப்பனகை, பூதனை போன்ற அரக்கிகளுக்கு இவ்வேடம் போடப்படும். இன்னொரு செய்தியும் சொல்ல வேண்டும். பழங்காலத்தில் பெண்கள் கதகளியில் ஆடுவதில்லை. ஆண்கள்தான் பெண்வேடம் போட்டு ஆடுவார்கள்.

மூர்த்தி : அப்படியா! வாலி மோட்சம், கிருஷ்ணன் தூது போன்ற கதைகள் தமிழ்நாட்டுத் தெருக் கூத்துகளிலும் இடம் பெறுகிறதே; தெருக்கூத்து நடிகர்கள் தலைக்குக் கிரீடம், கைகளுக்குப் புஜக்கட்டை, கழுத்தில் ஆபரணங்கள் அணிந்துகொண்டு வருவார்கள். கதகளி ஆபரணங்கள் பற்றிச் சொல்லுங்களேன்.

குருகோவிந்த்: வேடங்களுக்குத் தகுந்தவாறு கிரீடம், ஆடை, ஆபரணங்கள் அமையும். உதாரணமாக, கத்தி, பச்சை வேஷங்களுக்கு வட்டவடிவில் கிரீடம் அமைக்கப்படும். ஸ்ரீகிருஷ்ணர், ராமன் முதலியவர்களுக்குச் 'சிரஸ்ரம் கிரீடம்' மட்டும்தான். இதை **'முடி'** என்பார்கள். கரிவேஷதாரிகள் கருநிற கிரீடங்கள் தலையில் வைத்துக் கட்டுவார்கள். உடையாகப் பாவாடை போல இடுப்புக்குச் சுற்றிலும் விலகி நிற்கும் ரீதியில் உடுத்தி, கச்சை கட்டி அலங்கரிப்பார்கள். இதை **'உடுத்துக்கட்டு'** என்பார்கள்.

மூர்த்தி : கதகளியில் நடிப்பு பற்றி இதுவரை ஏதும் கூறவில்லையே! அய்யா!

குருகோவிந்த்: அதற்குத்தான் இப்போது வருகிறேன். சொல்கிறேன் கேளுங்கள். நான்கு வித நடிப்புகளின் சங்கமம்தான் கதகளி. அவற்றில் முக்கியமானவை அங்க அசைவுகளும் முத்திரைகளும் ஆகும். பின்னணிப் பாடகர் கதையைப் பாடலாகப் பாடுவார். அதற்கேற்ப வாத்திய மேளங்கள் ஒலிக்கும். கதகளி நடிகன் பாடல் கருத்துகளை நடிப்பின் மூலம் வெளிப்படுத்துவான். நவரசங்களையும் அவனது முக பாவங்களில் கண்டு களிக்கலாம். கண், புருவம், இமை, கண்பார்வை, கன்னம், மூக்கு, கீழ்உதடு, மேல் உதடு, பற்கள், நாக்கு, தாடி, வாய் ஆகிய பன்னிரண்டு உபஅங்கங்களின் அசைவைக் காணலாம்.

மூர்த்தி : கதகளியில் இடம்பெறும் பக்க வாத்தியங்கள் குறித்தும் கொஞ்சம் சொல்லுங்களேன்.

குருகோவிந்த்: ஒப்பனை அறையிலிருந்து மேடைக்கு வருகிற கதகளி நடிகன், மேடையிலிருந்து மறைவது வரை செய்யும் எல்லா அங்க அசைவுகளும் தாளத்தை அனுசரித்துத்தான் இருக்கும். செம்பட, சம்பா, அடந்த, பஞ்சாரி இப்படி நாலு வித கதகளித் தாளங்கள் நடை முறையில் இருக்கின்றன. ஒரு பதத்தை முக்கிய பாடகனும் பக்கப் பாட்டுக்காரனும் முடிக்கும் போது நடிகன், அதற்கேற்ப முத்திரை காட்டியிருக்க வேண்டும். இடுப்பைத் தாழ்த்தி ஒவ்வொரு காலாய்த் தாளத்துடன் முன்னால் வைத்து அமர்ந்து மிதித்துப் பின்னால் குதித்து ஒற்றைக் காலில் நின்றும் முத்திரையைக் காட்டலாம். இதைச் **சவிட்டிச்சாடி** முத்திரைக் காட்டுவது என்பார்கள். இசை, இலக்கியம், நடிப்பு, நடனம், ஓவியக்கலை ஆகிய அழகுக்க லைகள் அற்புதமாய்க் கலைச்செழிப்புடன் சங்கமிக்கும் விழுமிய கலைதான் கதகளி. ஓரளவு எல்லாவற்றையும் விளக்கி விட்டேன் என நினைக்கிறேன், திருப்திதானே!

மூர்த்தி : போதுமையா, மிகவும் மகிழ்ச்சி. தங்களுக்கு மிக்க நன்றி. வருகிறேன்.

**விடை காண்போம்**

- கேளி கொட்டு என்றால் என்ன?

- மத்தளக் கேளி – குறிப்பு வரைக
- தோடையம் என்றால் என்ன?
- திரை நோட்டம் – விளக்குக.
- கதகளியில் பயின்று வருடம் வேடங்கள் குறித்து எழுதுக.
- ஆட்டக்கதை – குறிப்பு எழுதுக.
- பொய்க்கால் குதிரையைச் செய்ய என் னென்ன பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன?
- கீழ்வரும் கதை நடனங்கள் எந்த மாநிலங்களில் ஆடப்படுகின்றன?
  - தெருக்கூத்து
  - யக்ஷ கானம்
  - கதகளி

## கற்றல் செயல்பாடுகள்

### ❖ பொருளறிவோம்

- பிரேமம் - அன்பு, காதல்
- சங்கீதம் - இசை
- சொர்க்கம் - விண்ணுலகம்

### ❖ பொருள் ஒன்று; சொற்கள் பல

- உலகம் - ஞாலம், பூமி, புவனம், பார்
- ஆண்டவன் - கடவுள், தெய்வம், படைத் தவன், ஈசன்
- சொர்க்கம் - துறக்கம், மேலுலகம், சுவ ணம்

### ❖ மொழிபெயர்ப்புச்செய்வோம்

- பின்வரும் ஆங்கிலச் சொற்களையும் தொடர்க ளையும் தமிழில் மொழிபெயர்ப்போம்.

| | |
|---|---|
| Learning | institution |
| Mind | Wisdom |
| Teaching | Light of the mind |
| Culture | Character |
| Art | Knowledge |
| Exercise | Cultivate |

Learning is the exercise to the mind.
Teaching is an art.
Shool is an institution where knowledge is cultivated. Knowledge is power.
Character is like white paper.

### ❖ அறிந்து கொள்வோம்

- மலையாள மொழியின் முதல் காவியம்
  - ◆ இராமசரிதம்
- மலையாள மொழியின் முதல் நாவல்
  - ◆ குந்தலதா
- தற்காலப் புகழ்பெற்ற மலையாளக் கவிஞர்கள்
  - ◆ ஓ.என்.வி. குறுப்பு
  - ◆ ஐயப்பப் பணிக்கர்
  - ◆ கடம்மனிட்ட இராமகிருஷ்ணன்
  - ◆ சச்சிதானந்தன்
  - ◆ விஷ்ணு நாராயணன் நம்பூதிரி
  - ◆ சுகதகுமாரி
  - ◆ செம்மனம் சாக்கோ

- **இந்தியக் கலை வடிவங்கள்**
  - ◆ பஞ்சாப் - பங்கரா நடனம்
  - ◆ குஜராத் - கர்பா நடனம்
  - ◆ ஆந்திரா - குச்சிப்புடி நடனம்
  - ◆ கர்நாடகம் - யக்ஷகானம்
  - ◆ தமிழ்நாடு - தெருக்கூத்து
  - ◆ ஒரிசா - ஒடிசி
  - \- கதக்

### ❖ கேரளத்தின் நிகழ்கலைகள் சில

- சாக்கியார்கூத்து
- ஓட்டந்துள்ளல்
- நங்கியார்கூத்து
- கிருஷ்ணனாட்டம்

### ❖ தமிழாக்கம் செய்வோம்

- ஞங்ஙள் -
- எந்து? -
- இந்நலே -
- மினிஞாந்நு -
- போட்டே -
- அச்சன் -
- குஞ்ஞம்மா -
- சுகமாணோ? -
- இரிக்கணம் -

### ❖ கலந்துரையாடுவோம்

- பஷீர், தகழி, எம்.டி. வாசுதேவன் நாயர் இவர்க ளின் ஏதேனும் ஒரு படைப்பை அடிப் படையாகக் கொண்டு அவற்றில் இடம் பெறும் பண்பாட்டுச் செய்திகளைப் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.

### ❖ நேர் காண்போம்

- உங்கள் பகுதியில் வாழும் எழுத்தாளர் ஒருவரை நேர்கண்டு, பெற்ற கருத்துக்களைக் குறிப்புக ளாக்குங்கள்.

### ❖ திறனாய்வு செய்வோம்

- கீழ்வரும் குறிப்புகளின் அடிப்படையில் வெள்ளப்பெருக்கு சிறுகதையைத் திறனாய்வு செய்க.

- கதைச் செய்தி
- கதைப் பாத்திரங்கள்
- கதை வருணனை
- வெள்ளப் பெருக்கின் சேதங்கள்
- நாயின் நன்றி உணர்வு
- கதை கூறும் உத்தி

**❖ ஒப்பிடுவோம்**

- முன் வகுப்பில் தெருக்கூத்துப் பற்றிப் படித்திருப் பீர்களல்லவா? அப்பாடத்திலுள்ள செய்தி களைக் கதகளியுடன் ஒப்பிடுக.

**❖ நடித்துக் காட்டுவோம்**

- கதகளியில் முத்திரைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன என்பதைப் படித்தோம். பரத நாட்டியத்திலும் முத்திரைகள் உள்ளன. இவ்வி ரண்டு கலைகளிலும் இடம்பெறும் ஐந்து முத் திரைகளைக் கற்று வகுப்பில் நடித்துக் காட்டுக.

**❖ காண்போம்/கற்போம்**

- காது கேளாதோருக்கான தொலைக்காட்சிச் செய்திகளைப் பார்த்து, வெவ்வேறு சைகைகள் எவற்றை விளக்குகின்றன என்பதைக் கண்டறிக.

**❖ ஊமை நடிப்பு**

- ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை மையமாக வைத்து சைகை நடிப்பு (மைம்) நடித்துக் காட்டுக.

**❖ வடிவம் மாற்றுவோம்**

- ஏதேனும் புராண/ வரலாற்று நிகழ்ச்சிகளை நாடக வடிவில் மாற்றியமைக்க.
- படித்த கதையில் பிடித்த பகுதியைக் நாடகமாக மாற்றி எழுதுக.

**❖ கதகளி ஆடுவோம்**

- அறிவு என்னும் தலைமைக் கதாபாத்திரம் அறியாமை, வறுமை ஆகிய அரக்கர்களை அழிப்பதாக உருவக ஆட்டக்கதை உருவாக்கிக் கதகளி ஆடுவோம்.

**❖ எனது குறிப்பேடு**

- புகழ்பெற்ற மலையாளக் கவிஞர்களும் அவர் தம் படைப்புகளும்
- உள்ளூரின் வேறு கவிதைகள்
- தமிழாக்கம் செய்யப்பட்ட சில மலையாளக் கவிதைகள்

இவற்றைத் திரட்டி எனதுகுறிப்பேட்டில் எழுதுங்கள்.

- **புகழ்பெற்ற மலையாள எழுத்தாளர்களையும் அவர்களது படைப்புகளையும் திரட்டி எழுதுக.**

| எழுத்தாளர் | படைப்பு |
|---|---|
| • பி. கேசவதேவ் | ஓடையில் நின்னு |
| • | |
| • | |

- தமிழில் வழங்கும் பழமொழிகளுக்கு இணை யான மலையாளப் பழமொழிகளைத் திரட்டு வோம்.

மாதிரி:

மின்னுவதெல்லாம் பொன்னல்ல - தமிழ்

மின்னுந்நதெல்லாம் பொன்னல்ல-மலையாளம்

- **இசைக்கருவிகளை அறிவோம்**
  - பல்வேறு இசைக்கருவிகளின் பெயர்களைத் திரட்டி, வகைப்படுத்தி எனது குறிப்பேட்டில் எழுதுக.

**❖ எனது படைப்பாற்றல் ஏடு**

- நீங்கள் படித்தவைகளில் உங்களுக்குப் பிடித்த ஒரு மலையாள-தமிழ்மொழியாக்கக் கவிதை யைத் திறனாய்வு செய்து மதிப்பிடுங்கள்.

- **கதைவேளை**

  ஏதேனும் மலையாளச் சிறுகதை ஒன்றைப் படித்தோ வாசிக்கக் கேட்டோ தமிழில் மொழி பெயர்த்துக் கூறலாம். நல்ல கதைகளை எனது படைப்பாற்றல் ஏட்டில் எழுதலாம்.

## தொடர் கருத்தறிவோம்

### வள்ளத்தோளும் குமாரனாசானும்

முப்பெருங்கவிஞர்களுள் ஒருவர் வள்ளத்தோள் நாராயணமேனோன். இவர் மலையாள மொழிக்கு வரிவடிவம் கொடுத்த எழுத்தச்சனையும் அவர் பிறந்த துஞ்சன் பறம்பு என்ற இடத்தையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

வெட்டத்து நாட்டில்
நித்ய மங்கலக் குங்குமப்
பொட்டுப் போல் திகழ்
துஞ்சன் திருத்தலமே, வணக்கம்

இன்னிசை பாடியோர்
இளங்கிளிப் பேடு
மென் கால் வைத்து நடனமாடிய
பச்சிலை வனமே, வணக்கம்

புது மலையாளம்
புனைந்தருள் குருபரன்
இதமுற வாழ்ந்த
புண்ணியக் கோயிலே, வணக்கம்.

எழுத்தச்சன் பிறந்த துஞ்சன் பறம்பு, மலையாள நாட்டின் புண்ணிய தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. எழுத்தச்சனின் நினைவு மண்டபமும் இங்கு எழுப்பப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் குழந்தைகளுக்கு முதன் முதலாக எழுத்தறிவிக்கும் சடங்கு மிகச் சிறப்பாக இங்கு நடத்தப்படுகிறது.

மலையாள மொழியின் சீர்திருத்தக் கவிஞர் என அறியப்படுபவர் குமாரனாசான். முப்பெருங் கவிஞர்களுள் இவரும் ஒருவர். ‘கருணை’, ‘வீழ்ந்த மலர்’ போன்ற அற்புதமான காவியங்களைப் படைத்தவர். இவரது,

‘அழிவின் வடிவாம் கொடுமையே!
நீ உன் தலைகளை எத்தனை விரித்தாலும்
இப்புண்ணிய பூமியின் பிஞ்சுக்கால் ஒன்று
போதும்
அவைகளை மிதித்துக் கீழே தள்ள!!’

என்ற பாடல் கண்ணபிரானை நினைவூட்டுவதாக அமைந்தாலும், விடுதலை உணர்வையும் வெளிப்படுத்துகின்றது.

### புரவியாட்டம்

கதகளியைப்போல் தமிழ்நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கலை புரவியாட்டம். இதைப் பொய்க்கால் குதிரை என்றும் கூறுவர். இக்கலைபற்றிய சில செய்திகளைத் தெரிந்து கொள்வோம்.

20 கிலோகிராம் எடையுள்ளதும், பல வண்ணங்களில் தீட்டப்பட்டதுமான மரக்குதிரைக் கூடுகளை அணிந்துகொண்டு ஆடுவது புரவியாட்டம். இந்தக் குதிரையைச் செய்ய சணல், அட்டை, காகிதம், கண்ணாடி, ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இதில் ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து ஒரு ஜோடியாக ஆடுவார்கள். பார்ப்பதற்குக் குதிரை மீது ஏறி வருவது போலத் தோன்றும். புராணக்கதைகளைக் கூறி இசைப் பாடல்களுக்கு ஏற்பத் திறமையுடன் ஆடப்படும் இந்த ஆட்டம் திருவிழாக்களில் கண்டு இன்புறத்தக்கது. தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் இந்தக் கலைக்குப் பேராதரவு கொடுத்து இதில் சில மாறுதல்களையும் செய்தனர். பரதநாட்டியம், கதக் நடனம் ஆகியவற்றின் இயல்புகளையும் இக்காலப் பொய்க்கால் குதிரை ஆட்டக்காரர்கள் கையாளுகிறார்கள்.

## இலக்கண விளக்கம் பெறுவோம்

பண்டைய சான்றோர்கள் பொருளை உணர்த்தவே இலக்கியம் படைத்தனர். அவர்கள் செய்யுளில் அமையத் தகுந்த பொருள்களை அகப்பொருள், புறப்பொருள் என்று இருவகையாகப் பாகுபாடு செய்தனர். மக்களின் அக வாழ்க்கையைப் பற்றிக் கூறுவது அகப்பொருள்; புறவாழ்க்கையைப் பற்றிக் கூறுவது புறப்பொருள்.

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் ஆகும்.

இவற்றில் பொருள் இலக்கணம் தமிழ் மொழிக்கே உரிய தனிச் சிறப்புடையதாகும்.

### அகப்பொருள்

'அகம்' என்னும் சொல்லுக்கு 'உள்ளம்' என்பது பொருளாகும். ஒத்த அன்புடைய தலைவன் தலைவி ஆகிய இருவர் உள்ளத்தே நிகழும் உணர்வை 'அகப்பொருள்' என்பர். அகப்பொருள் பற்றி நிகழும் ஒழுக்கமே அகத்திணை ஆகும். 'திணை' என்பதற்கு 'ஒழுக்கம்' என்பது பொருள்.

அகத்திணைகள் ஐந்து வகைப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன வாகும்.

இவற்றை 'அன்பின் ஐந்திணை' என்றும் கூறுவர். ஒவ்வோர் அகத்திணைக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூவகை பொருள்கள் உண்டு.

### முதற்பொருள்

- நிலமும் பொழுதும் முதற்பொருளாகும்.

குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்

முல்லை - காடும் காடுசார்ந்த இடமும்

மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும்

நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்

பாலை - முல்லையும் குறிஞ்சியும் கோடையில் தன்னியல்பு மாறுபட்டு விளங்கும் இடம்

குறிப்பு : பாலைக்கெனத் தனி நிலம் இல்லை.

### பொழுது

அகப்பொருள் நிகழ்ச்சிக்குரிய பொழுதை இரு வகையாகப் பிரித்துக் கூறுவர். அவை பெரும் பொழுது, சிறுபொழுது என்பனவாம். ஓராண்டின் ஆறு பருவங்களும் பெரும் பொழுதுகள்; ஒரு நாளின் ஆறு கூறுபாடுகளும் சிறுபொழுதுகள் எனப் பகுக்கப் பெறும்.

### ஆறு பெரும் பொழுதுகளின் மாதங்கள்.

| காலம் | மாதம் |
|---|---|
| கார்காலம் | ஆவணி, புரட்டாசி |
| குளிர்காலம் (கூதிர்) | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனிக் காலம் | மார்கழி, தை |
| பின்பனிக் காலம் | மாசி, பங்குனி |
| இளவேனில் | சித்திரை, வைகாசி |
| முதுவேனில் | ஆனி, ஆடி |

கார்காலம் - மழைக்காலம்

வேனில் - வெயில்காலம்

கூதிர்க்காலம் - குளிர்காலம்

முன்பனி - மாலைக்குப்பின் பனி பெய்யும் காலம்

பின்பனி - காலையில் பனி பெய்யும் காலம்

### சிறுபொழுது

ஒவ்வொரு சிறுபொழுதும் நான்கு மணிநேர அளவுடையது. அதாவது பத்து நாழிகை (ஒரு மணி = இரண்டரை நாழிகை)

| சிறு பொழுது | அதற்குரிய நேரம் |
|---|---|
| வைகறை (விடியல்) | பின்னிரவு 2 மணி முதல் 6 மணி வரை |
| காலை | முற்பகல் 6 மணி முதல் 10 மணி வரை |
| நண்பகல் | முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை |
| எற்பாடு (எல்-சூரியன்; சூரியன் மறையும் நேரம்) | பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை |
| மாலை | முன்னிரவு 6 மணி முதல் 10 மணி வரை |
| யாமம் (நள்ளிரவு) | 10 மணி முதல் பின்னிரவு 2 மணி வரை |

### கருப்பொருள்

ஐவகை நிலங்களில் ஒவ்வொரு நிலத்திற்குமுரிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், யாழ், பண், தலைமகள், தலைமகன், பூ, நீர், ஆடவர், மகளிர், ஊர் முதலியவை கருப்பொருள்கள் ஆகும்.

### உரிப்பொருள்

ஐவகை நிலங்களுக்கும் உரிய ஒழுக்கம் உரிப்பொருள் எனப்படும்.

குறிஞ்சி - புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

முல்லை - இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

மருதம் - ஊடலும் ஊடல் நிமித்தமும்

நெய்தல் - இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

பாலை - பிரிதலும் பிரிதல் நிமித்தமும்.

**புறப்பொருள்**

புறத்தே நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறுவது புறப் பொருள் ஆகும். அறம், பொருள், வீடு முதலியவை பற்றிய கல்வி, வீரம், கொடை ஆகிய ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறப்பொருள் என்பர்.

புறத்திணைகள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என 12 வகைப்படும்.

**வெட்சித்திணை**

பகை நாட்டின் மீது போர்தொடுக்க விரும்பும் அரசன் போர்தொடுப்பதற்குமுன் அந்த நாட்டிற்குத் தன் வீரர்களை அனுப்பி, பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வரச்செய்வான். இவ்வாறு பசுக்களைக் கவர் தல் வெட்சித்திணை ஆகும். இவ்வீரர்கள் வெட்சிப் பூவைச் சூடுவர்.

**கரந்தைத்திணை**

பகைவர்கள் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டல் கரந்தைத் திணை ஆகும். இவ்வீரர்கள் கரந்தைப் பூவைச் சூடுவர்.

**வஞ்சித்திணை**

பகையரசனுடைய நாட்டைக் கைப்பற்றக் கருதி மற்றோர் அரசன் போருக்குச் செல்வது வஞ் சித்திணை ஆகும். அப்பொழுது வீரர்கள் வஞ்சிப்பூ வைச் சூடுவர்.

**காஞ்சித்திணை**

நாட்டைக் கைப்பற்றப் போர்தொடுத்து வந்த பகைவரைத் தம் நாட்டு எல்லைக்குள் நுழையாத வாறு வீரர்கள் காஞ்சிப் பூவைச் சூடி எதிர்த்து நின்று தடுப்பது காஞ்சித் திணையாகும்.

**நொச்சித் திணை**

மதிலை வளைத்துக்கொண்ட பகைவர்கள் கோட்டைக்குள் நுழையாதவாறு தடுத்து நிறுத்தல் நொச்சித் திணையாகும். அப்பொழுது வீரர்கள் நொச்சிப் பூவைச் சூடுவர்.

**உழிஞைத் திணை**

பகையரசின் மதிலை வளைத்துக் கொண்டு முற்றுகையிடுதல் உழிஞைத் திணையாகும். அப்பொழுது வீரர்கள் உழிஞைப் பூவைச் சூடுவர்.

**தும்பைத் திணை**

இருபெரு வேந்தரின் படைவீரர்கள் எதிரெதிரே நின்று பரந்த போர்க்களத்தில் போர்புரிதல் தும்பைத் திணை எனப்படும். அப்பொழுது வீரர்கள் தும்பைப் பூவை அணிந்திடுவர்.

**வாகைத் திணை**

வெற்றி பெற்ற அரசனும் அவ்வரசனின் வீரர் களும் வெற்றி பெற்றதற்கு அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுதல் வாகைத் திணை எனப்படும்.

**பாடாண் திணை**

அரசனுடைய புகழ், கொடை, வலிமை, வீரம் முதலிய பண்புகளைப் புகழ்ந்து பாடுவது பாடாண் திணையாகும். பாடு+ஆண்+திணை எனப் பிரித்து, பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் புகழ்வது எனப் பொருள் கொள்வர்.

**பொதுவியல் திணை**

வெட்சி முதலிய ஒன்பது புறத்திணைகளுள் சொல்லப்படாத பொதுவான செய்திகளைத் தொகுத்து உரைப்பது பொதுவியல் திணையாகும்.

**கைக்கிளைத் திணை**

தலைவன் தலைவியருள் ஒருவரிடத்து மட்டுமே தோன்றும் ஒருதலை அன்பு கைக்கிளை எனப்படும்.

**பெருந்திணை**

இளமையாலும் வயதாலும் பொருந்தாத அன்பு பெருந்திணையாகும்.

**விடை காண்போம்**

- அகத்திணை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
- புறத்திணை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
- ஐவகை நிலங்களுக்குமுரிய உரிப்பொருள் யாது?

# அருஞ்சொற்பொருள் அகராதி

| | | |
|---|---|---|
| அகவை | - | வயது |
| அடும்பு | - | அடுப்பங்கொடி, ஒரு வகைபூ |
| அருந்தவன் | - | இந்திரன் |
| அல்லல் | - | துன்பம் |
| அலர் | - | பழிதூற்றுதல், வம்பு |
| அறுவை | - | ஆடை |
| அறை | - | பாறை |
| ஆரம் | - | சந்தனம், மாலை |
| ஆரணம் | - | மறை, வேதம் |
| இடர் | - | துன்பம் |
| இன்னா | - | தீமை |
| ஈரம் | - | அருள், அன்பு, குளிர்ச்சி |
| உதிரம் | - | இரத்தம் |
| ஊழி | - | உலக முடிவுகாலம் |
| எயிறு | - | பல் |
| கச்சை | - | கயிறு, நாடா |
| கரந்து | - | மறைந்து |
| கலாம் | - | கலகம் |
| களிறு | - | ஆண் யானை |
| கள் | - | தேன் |
| கழஞ்சு | - | ஓர் எடை அளவு |
| கவரா | - | மனம் கவராத |
| கவின் | - | அழகு |
| காசினி | - | உலகம் |
| கானம் | - | காடு |
| கிள்ளை | - | கிளி |
| கும்பி | - | வயிறு |
| குருளை | - | குட்டி |
| குழீஇ | - | குழுமி |
| குழை | - | குண்டலம் |
| குவலயம் | - | உலகம் |
| கேண்மை | - | நட்பு |
| கேளிர் | - | உறவினர் |
| கொற்றம் | - | அரசு |
| கொடுகுதல் | - | நடுங்குதல் |
| கோட்டி | - | மன்றம் |
| சமயக்கணக்கர் | - | நாழிகைக் கணக்கர் |
| சால | - | மிகவும் |
| சித்தம் | - | உண்மை, உள்ளம், துறவு |
| சிங்களம் | - | இலங்கையின் பழைய பெயர் |
| சிந்தை | - | மனம், உள்ளம் |
| செற்றம் | - | தணியாசினம், பகை |
| சேது | - | பாலம் |
| ஞாலம் | - | உலகம், பூமி |
| தண்ணளி | - | இரக்கம், அருள் |
| தணப்பு | - | செலவு, பிரிவு |
| தணிதல் | - | இன்புறுதல் |
| தந்தம் | - | யானைக் கொம்பு, பல் |
| தாம் | - | மாலை |
| தாரணி | - | உலகம் |
| திரை | - | அலை |
| திரு | - | செல்வம், இலக்குமி தேவி |
| தீது | - | தீமை |
| துன்று | - | நெருங்கு |
| துருத்தி | - | உலையூதும் கருவி, தோல் பை |
| துன்றுதல் | - | நெருங்குதல் |
| தூங்கெயில் | - | தொங்கும் மதில், அரண் |
| தேரை | - | ஒரு வகை நிலத்தவளை |
| தோணி | - | படகு |
| நந்தி | - | காளை |
| நம்பி | - | உன்தம்பி |
| நளினம் | - | தாமரை |
| நெறி | - | வழி |
| பாடை | - | பாஷை, மொழி |
| பாலிகை | - | கலம் |
| பீடை | - | துன்பம் |
| புணை | - | தெப்பம், மரக்கலம் |

| | | |
|---|---|---|
| புகல் | – | தஞ்சம், உபாயம், சரண் |
| புள் | – | பறவை |
| பூதலம் | – | பூமி |
| பூவை | – | கிளி, குயில், நாகணவாய்ப்புள் |
| பெட்டகம் | – | வரிசை, பெட்டி |
| பொலம் | – | பொன் |
| மந்தை | – | கூட்டம் |
| மஞ்ஞை | – | மயில் |
| மறுகும் | – | கலங்கும் |
| மன்பதை | – | உலகம் |
| மறலை | – | அற்பன் |
| மா | – | பெரிய |
| மாட்சி | – | பெருமை |
| முசு | – | குரங்கு |
| முனிபு | – | சினம், கோபம் |
| முகில் | – | மேகம் |
| முடி | – | மகுடம் |
| மேம்படீஇய | – | சிறக்க |
| மையல் | – | மயக்கம் |
| மௌலி | – | மகுடம், தலை, உச்சிக் குடுமி |
| வசி | – | மழை |
| வலி | – | வலிமை |
| வடமீன் | – | அருந்ததி நட்சத்திரம் |
| வண்மை | – | வலிமை |
| விளம்புதல் | – | சொல்லுதல் |
| வேந்து | – | மாமன்னன், அரசன் |
| வேள்வி | – | யாகம் |

**இந்திய அரசியலமைப்புச் சட்டம்**

**பாகம் 4 அ**

**இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்**

**பிரிவுக்கூறு 51 அ**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தல்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் 7நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம் அல்லது இன வேற்றுமைகளால் வரம்பு மீறுகிற நிலையில் எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும் பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள்மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம் மற்றும் விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்;

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்

(ஒ) பெருமுயற்சிகள் மற்றும் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித மற்றும் கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை நோக்கி முயலுதல்;

ஆகிய இவ்வனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.